# யூலை – 05 – வியாழன்

### புனித அந்தோனி சக்கரியா

### ஆண்டவரின் நியமங்கள் சரியானவை: அவை இதயத்தை மகிழ்விக்கின்றன. திபா. 19:8

## முதல் வாசகம் : ஆமோஸ் 7: 10 – 17

அக்காலத்தில், பெத்தேலின் குருவாகிய அமட்சியா என்பவன் இஸ்ரயேலின் அரசன் எரொபவாமுக்கு இவ்வாறு சொல்லியனுப்பினான் ”இஸ்ரயேல் வீட்டாரிடையே ஆமோஸ் உமக்கு எதிராகச் சதிசெய்கிறான்.அவன் சொல்வதை எல்லாம் இந்த நாட்டால் தாங்கமுடியவில்லை. ஏனெனில், ”எரொபவாம் வாளால் மடிவான் அவனது நாட்டைவிட்டு இஸ்ரயேல் அடிமையாய்க் கொண்டுபோகப்படும் என்று ஆமோஸ் சொல்லுகிறான். ”பின்பு அமட்சியா ஆமோசைப் பார்த்து, ”காட்சி காண்பவனே, இங்கிருந்து போய்விடு யூதாவின் நாட்டுக்கு ஓடிவிடு. அங்கேபோய் இறைவாக்கு உரைத்து, உன்பிழைப்பைத் தேடிக்கொள். பெத்தேலில் இனி ஒருபோதும் இறைவாக்கு உரைக்காதே. ஏனெனில், இது அரசின் புனித இடம், அரசுக்குரிய இல்லம்” என்று சொன்னான்.ஆமோஸ் அதற்கு மறுமொழியாக அமட்சியாவைப் பார்த்துக்கூறினார் ”நான் இறைவாக்கினன் இல்லை. இறைவாக்கினர் குழுவில் உறுப்பினனும் இல்லை. நான் ஆடுஇ மாடுமேய்ப்பவன், காட்டு அத்திமரத் தோட்டக்காரன். ஆடுகள் ஓட்டிக்கொண்டுபோன என்னை ஆண்டவர் தேர்ந்தெடுத்து, ”என் மக்களாகிய இஸ்ரயேலிடம் சென்று, இறைவாக்கு உரைத்திடு” என்று அனுப்பினார்.எனவே, இப்பொழுது ஆண்டவரின் வாக்கைக்கேள் ”இஸ்ரயேலுக்கு எதிராக இறைவாக்கு உரைக்காதே. ஈசாக்கின் வீட்டாருக்கு எதிராகப் பேசாதே” என்று நீ சொல்கிறாய்!ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார் ”உன் மனைவி நகரில் விலைமகளாய் இருப்பாள். உன் புதல்வரஇ் புதல்வியர் வாளால் மடிவர் உன்நிலபுலம் பங்கு போட்டுக்கொள்ளப்படும், நீயோ புனிதமற்ற நாட்டிலே மாண்டு போவாய் இஸ்ரயேல் தன்நாட்டுக்கு வெளியே அடிமையாகக் கொண்டுபோகப்படும்.”

**பதில்பாடல் :** ஆண்டவரின் நீதிநெறிகள் உண்மையும் நீதியுமானவை

## நற்செய்தி : மத்தேயு 9 : 1- 8

அக்காலத்தில் இயேசு படகேறி மறுகரைக்குச்சென்று தம்சொந்த நகரை அடைந்தார்.அப்பொழுது சிலர் முடக்குவாதமுற்ற ஒருவரைக் கட்டிலில் கிடத்தி அவரிடம் கொண்டுவந்தனர். இயேசு அவர்களுடைய நம்பிக்கையைக்கண்டு முடக்குவாதமுற்றவரிடம், ”மகனே, துணிவோடிரு, உன்பாவங்கள் மன்னிக்கப்பட்டன” என்றார்.அப்பொழுது மறைநூல் அறிஞர்கள் சிலர், ”இவன் கடவுளைப் பழிக்கிறான்” என்று தமக்குள் சொல்லிக்கொண்டனர். அவர்களுடைய சிந்தனைகளை இயேசு அறிந்து அவர்களை நோக்கி, ”உங்கள் உள்ளங்களில் நீங்கள் தீயன சிந்திப்பதேன்? ”உன்பாவங்கள் மன்னிக்கப்பட்டன” என்பதா, ”எழுந்துநட” என்பதா, எது எளிது?மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்” என்றார். பின்பு அவர் முடக்குவாதமுற்றவரை நோக்கி, ”நீ எழுந்து உன்னுடைய கட்டிலைத் தூக்கிக்கொண்டு வீட்டுக்குப்போ” என்றார். அவரும் எழுந்து தமது வீட்டுக்குப்போனார். இதைக்கண்ட மக்கள் கூட்டத்தினர் அச்சமுற்றனர். இத்தகைய அதிகாரத்தை மனிதருக்கு அளித்த கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர்.

**தியானம்:** கிறிஸ்தவன். கிறிஸ்தவள் என்ற உரிமைப் பேற்றைப் பெற்றுள்ள நாங்கள் ஒவ்வொருவரும் இறைவனது கட்டளைகளையும், நியமங்களையும் கடைப்பிடித்து அவரது அழைப்பை ஏற்று அவர் பணி செய்திடவேண்டு மென்று இன்றைய வாசகங்கள் தெளிவுபடுத்துகின்றது. இறைமகன் இயேசு தனக்கென்று அழைத்தவர்களை சாதி, மத, பேதம் பார்த்து அழைக்கவில்லை. நான் ஆடு மேய்ப்பவன், அத்திமரத் தோட்டக்காரன் நான் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும் போது ஆண்டவரால் நான் அழைக்கப்பட்டு இஸ்ராயேல் மக்களுக்கு இறைவாக்கு உரைக்கும்படியாக ஆமோஸ் இறைவாகிகினா் கூறியதை முதல் வாசகத்தில் பார்க்கின்றோம். (ஆமோஸ். 7:15) நற்செய்தி வாசகத்திலும் கூட சுங்கச் சாவடியில் இருக்கும் மத்தேயுவை இயேசு “என்னைப் பின்பற்றிவா” என்று அழைக்கின்றாா் அவரும் அவா் பின்னே செல்கின்றாா். (மத்.9:8) இன்று எங்களையும் அவா் அழைக்கின்றாா். நாங்கள் அவா் அழைக்கும் பொழுது அவா் பின்னே செல்வதற்கு தயாராக உள்ளோமா?. ஏனென்றால் நாங்கள் வாழும் வாழ்வானது உலகமாயைக் கவர்ச்சிகளுக்கு அடிமைப்படுத்தப் பட்டவர்களாக, அவரதுகட்டளைகளைகளையும், நியமங்களையும் கடைப்பிடிக்காமல் அவா் அழைப்பிற்கு செவிகொடுக்க தவறி, ஏனோதானோ என்று வெளிவேடமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். கட்டளைகளைகளைக் கடைப்பிடித்து வாழ்ந்தோமேயானால் அவரது அழைப்பை உணா்ந்து கொள்ள முடியும். ஏனெனில் நற்செய்திவாசகத்தில் “நீதிமான்களை அல்ல பாவிகளையே தேடிவந்தேன்” (மத.9:13). என்று கூறுவதைப் பார்க்கின்றோம். இன்று பாவிகளாகிய எங்களையும் மன்னித்து புதுவாழ்வு தந்த இறைமகன் இயேசுவை நாங்கள் எந்த அளவில் ஏற்றுக் கொண்டுள்ளோம்?. அழைப்பு என்பது மிகவும் இலகுவானதல்ல.. எனவே தாயின் கருவறையில் உருவாகும் முன்னே தெரிந்தெடுத்த இறைமகன் இயேசுவின் அழப்பை ஏற்றுக்கொள்ள எமது சுயநலம், உலகநாட்டங்கள் இவ்வாறான காரியங்களிலிருந்து விடுபட்டவர்களாக அவா் அழைப்பை ஏற்றுக்கொள்ள எங்களைத் தயார்படுத்துவோம்.